★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. கழக தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 9உ வியாழன் (25—10—56) ★ ★ வெளியீடு: ஐப்பசி 10உ வெள்ளி (26—10—56) [இதழ் 117

வளர்ந்துள்ள அளவு!

★

இந்தூர், அக். 24—

"அமெரிக்காவில் பெண்கள் தாங்கள் அழகாயிரா விட்டால், பல்லைப்பிடுங்கி, மூக்கை அறுத்து செயற்கைப் பற்களும், மூக்கும் வைத்துக் கொள்ளுகின்றனர்; இந்த அளவுக்கு மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது; செத்தவருக்கு உயிரூட்ட வேண்டியதுதான் பாக்கி."

என்று பண்டித பந்த், மகாராசா யஷ்வந்தராவ் மருத்துவ மனையைத் திறந்து வைக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுத் தேர்தலில்:

150 இடங்களில் தி. மு. கழகம் போட்டியிடும்

சென்றவிடமெல்லாம் அண்ணாவைக் கண்டோம்

அவர் தலைமையில் ஆற்றிய பணியின் பலனைப் பார்த்தோம்

தோழர் ஈ. வெ. கி. சம்பத் பெருமிதம்

"நாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் தோழர்களிடத்திலும், மக்களிடத்திலும் கரைபுரண்டு ஓடுகின்ற ஆர்வத்தைக் கண்டோம்; சுருக்கமாகச் சொன்னால், சென்ற இடங்களில் எல்லாம் அண்ணா அவர்களை எங்கும் கண்டோம்.

"அண்ணா அவர்கள் தலைமையில் நாம் கடந்த எட்டாண்டுகளாக ஆற்றிவரும் அரும்பணியின் உண்மையான பலனைக் கண்டோம்; தெளிவாக உணர்ந்தோம்.

"கஷ்டப்பட்டுக் காடு திருத்தி, உழுது விதைத்து, பூச்சி—புழு அண்டாமல் தடுத்து, வரப்பெடுத்து, களை பிடுங்கி, பயிரைக் கண்ணெனப் பாதுகாத்து, இன்னும் பத்து நாளோ பதினைந்து நாளோ கழித்து அறுவடை செய்யப்போகும் நிலையில் பொன் நிற நெற்கதிர்களைக் காணும் உழவனின் உள்ளத்தில் பொங்கும் களிப்புத்தான், நமது உள்ளத்திலும் இப்போது நிறைந்திருக்கிறது.

"நமது இந்த மகிழ்ச்சி, பால் தரும் என்று நாம் எதிர்பார்க்கிற மாடுகளுக்கும், பாலே தராத மலட்டு மாடுகளுக்கும் நம்மைப்பற்றிய எண்ணத்தை மாற்றிக் கொள்ளுமாறு உணர்த்த வேண்டும்.

"நாங்கள் கண்டறிந்த நிலைகளை அண்ணா அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். யாரையும் எளிதில் நம்பவைத்து விடலாம்; ஆனால், அண்ணா அவர்களை நம்பவைப்பது அவ்வளவு சுலபமானதல்ல.

நம்பிக்கையூட்டும் நல்ல சூழ்நிலை

"எங்கள் பணிக்கு அவர் தந்த பெருமைதான்— பாராட்டுத்தான், இன்று நாங்கள் பேசுகிற கூட்டத்திற்கு அவர்கள் தலைமை தாங்க ஒப்புக்கொண்டது.

"சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டிற்குப் பிறகு நாங்கள் எல்லாம், அவர் தலைமையில் இப்போதுதான் பேசுகிறோம். நமக்கெல்லாம் வழிகாட்டியாய்— பேராசிரியராய் இருந்து, எந்தக் காரியங்களையும் செய்துக் கற்றுக் கொடுத்த அவர் தலைமையில் பேசுவதை நாங்கள் பெரும் பெருமைக்குரியது என்று கருதுகிறோம்,"

—என்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் நேற்றைய சென்னைச் சிறப்புக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்

நாட்டில் வளர்ந்துள்ளது

கழகத்தின் வலிவுக்கும் பொலிவுக்கும் சீரிய எடுத்துக்காட்டு

எங்கணும் அளவில்லா ஆர்வம்; மட்டில்லா மகிழ்ச்சி

தேர்தல் ஆய்வுக் குழு கண்டறிந்த நிலைகள் குறித்து அண்ணா கருத்துரை

"நாட்டிலே ஒரு நல்ல எதிர்க்கட்சி வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புகிறார்கள். நல்ல எதிர்க்கட்சியிருந்தால்தான் ஜனநாயகம் தழைக்கும். அப்படி ஒரு நல்ல எதிர்க்கட்சியாகத் தேவையான வலிவும் பொலிவும் கொண்டதாக இன்று தி. மு. கழகம் வளர்ந்திருக்கிறது.

"ஒரு 50 இடங்களுக்குப் போட்டியிட்டால் அதுவே போதும்—என்ற அளவுதான் நம்மில் பலர் நம்பிக்கொண்டிருந்தோம்; ஆனால் தேர்தல் ஆய்வுக் குழுவினர் நாடெங்கும் சுற்றிக் கண்டதில், நாம் தேர்தலில் ஈடுபடுவதற்கு நல்ல சூழ்நிலைகள் வளர்ந்திருப்பதையும் ஆங்காங்கே கழகத் தோழர்கள் காட்டிய ஆர்வத்தையும், ஊட்டிய நம்பிக்கையையும் தந்துள்ள வாக்குறுதிகளையும் என்னிடத்தில் எடுத்துச்சொன்னார்கள்.

"நிலைமைகளை எல்லாம் நன்கு ஆராய்ந்த பின்னர் அவர்கள் தந்த சிபாரிசில், எனக்குள்ள வழக்கமான சந்தேகத்திற்காகச் சில இடங்களைக் கழித்துவிட்டு, 150 இடங்களுக்கு நாம் தேர்தலில் போட்டியிடலாம் என்ற முடிவுக்கு வந்தோம். (இடைவிடாத நீண்ட கையொலி; மகிழ்ச்சி ஆரவாரம்)

"மகிழ்ச்சிகரமான இந்தச் செய்தியை அறியும் நீங்கள், ஒன்றை மறந்துவிடக்கூடாது; 150 இடங்களுக்குப் போட்டியிடுவது என்றால், அது மகிழ்ச்சிக்குரியது என்பது மட்டுமின்றி, நாம் எவ்வளவு வேலைப் பளுவைச் சுமக்கவேண்டும் என்பதையும் சொல்லுவதாகும். அந்த வேலைப் பளுவினை நாங்கள் சுமப்பதற்கு, மக்கள் தங்கள் ஆதரவினை இப்போதுபோல் தொடர்ந்து தந்தாகவேண்டும். தோழர்கள் முன்னைவிட கடுமையாக உழைத்தாகவேண்டும், அப்போதுதான், நாம் மேற்கொண்டிருக்கிற இந்த 150 இடங்களுக்குப் போட்டியிடுவது என்ற வேலையை வெற்றிகரமாக முடிக்கமுடியும்."

—என்று அண்ணா அவர்கள் நேற்று மாலை கோகலே மண்டபத்தில் தலைமை நிலையத்தின் சார்பில் நடைபெற்ற தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

நாட்டின் மானம் காக்கத் தவறிய சர்க்காருக்கு......!

மக்கள் பாடம் புகட்டுவதற்குத் தயாராயிருக்கின்றனர்

என். வி. நடராசன் தரும் தகவல்

"நாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் தோழர்கள் எங்களது நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில் தகவல் பல தந்தனர்.

"ஆங்காங்கே நமது தோழர்கள் ஆற்றியுள்ள பணியினையும், தேர்தலில் ஈடுபடுவதில் அவர்கள் காட்டுகிற உற்சாகத்தையும், மேலும் உழைப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள் என்ற ஊக்கத்தையும் நாங்கள் கண்டோம். அது மட்டுமன்றி, நாட்டு மக்கள் நம்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதையும் எங்களால் உணர முடிந்தது.

"நாங்கள் சுற்றுப்பயணம் துவங்கிய உடனே ஆத்திரம் கொண்ட ஒரு எழுத்தாளர்—ஏற்கனவே எதை எதையோ எழுதி நம்மை அழித்துவிடலாம் என நினைத்து மூக்கறுபட்ட எழுத்தாளர் ஒருவர், நாங்கள் சுற்றுப்பயணம் முடித்துவிட்டு, 'தேர்தலில் நிற்பதற்கு ஒரு ஆள்கூடக் கிடைக்கவில்லையே அண்ணா! என் செய்வோம்,' என்று

(4-ம் பக்கம் பார்க்க)

ஒளிவு மறைவின்றி கருத்தறிவித்தனர்

நமது நிலையும் மாற்றார் நிலையும் கூறக் கேட்டோம்

பொதுச்செயலாளர் சுற்றுப்பயண விவரம் தருகிறார்

"நாடெங்கிலும் 13 நாட்கள்—1,500 மைல்களுக்கு மேல் சுற்றி, 21 இடங்களில் தங்கி, 6,500 பேர்களின் கருத்துக்களைப் பதிவு செய்தது தேர்தல் ஆய்வுக் குழு.

"இப்படித் திரட்டிய தகவல்களையும் கருத்துக்களையும்தான் சீர்தூக்கிப் பார்த்து, நாங்கள், கழகம் தேர்தலில் ஈடுபடுவதற்குரிய வாய்ப்புகளை—சூழ்நிலைகளைக் கணக்கிட்டோம்.

"தோழர்களிடத்தில் மனம் விட்டுப் பேசுமாறு கேட்டோம்; அவர்களும், தனித்தும் கூட்டாகவும் எங்களிடத்தில் ஒளிவு மறைவின்றி தகவல்களைத் தந்தனர்.

"நமக்கு இருக்கக்கூடிய எதிர்ப்புகள், ஏற்படக்கூடிய தாக்குதல்கள், நமது கழக வளர்ச்சி, மாற்றுக் கட்சியினரின் நிலை, பொதுவான மக்களின் மனப்போக்கு இவை பற்றி எல்லாம், நாங்கள் மடக்கி மடக்கி, துளைத்துத் துளைத்துக் கேட்டோம்; அத்தனைக்கும் தோழர்கள் சளைக்காமல் பதில் கூறினார்கள்; தகவல்கள் தந்தார்கள்.

"இவைகளை எல்லாம் அறிந்துதான், நாம் 150 இடங்களுக்குப் போட்டியிடக்கூடிய வாய்ப்புகள் நிச்சயம் இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தோம்."

—என்று நமது பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள், நேற்று சென்னைச் சிறப்புக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

சர்வாதிகார ஆட்சிக்கு சாவுமணி அடிப்போம்

நல்லாட்சி அமைய மக்கள் நம்மைத்தான் எதிர்பார்க்கின்றனர்

தோழர் மதியழகன் மகிழ்ச்சியுரை

"150 இடங்களில் நாம் போட்டியிடப் போகிறோம் என்று அண்ணா அவர்கள் அறிவித்ததும், நீங்கள் எல்லாம் நீண்ட நேரம் கையொலி எழுப்பினீர்கள்; அது உங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவிப்பதாக மட்டுமில்லை—நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வாதிகார ஆட்சிக்குச் 'சாவுமணி' அடிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

"நாங்கள் சூழ்நிலை அறிவதற்காகச் சுற்றுப் பயணம் செய்தபோது, ஆங்காங்கே நூற்றுக்கணக்கான தோழர்களைச் சந்தித்தோம்; அவர்களின் கருத்துக்களை அறிந்தோம்.

"ஏதோ, வேண்டிய நாலு பேரைக் கூப்பிட்டுக் கேட்டோம் என்றில்லாது, எவர் எவர் எங்க

(4-ம் பக்கம் பார்க்க)

★ நிகழ்ச்சி:

சென்னை கோகலே மண்டபத்தில், 24—10—56 மாலை 6 மணி அளவில் தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் சார்பில் தேர்தல் நிதிக்காக ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

சுற்றுப்பயணம் சென்று வந்த தேர்தல் குழுவினரும், தேர்தல் குழுத் தலைவரான அண்ணா அவர்களும் பேசுகிறார்கள் என்பதை அறிந்து, நன்கொடையாக ரூ. 1, அணா 8 செலுத்தி எண்ணற்ற தாய்மார்கள் உள்பட ஏராளமான மக்கள் மண்டபத்தை நிரப்பியிருந்தனர்.

கூட்டத்தில் கலந்துகொள்ள அண்ணா அவர்களும், இதரரும் வந்தபோது, கூடியிருந்தோர்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 25—10—'56 வியாழன்

ஆபத்தான போக்கு

[II]

இந்தியத் துணைக்கண்டத்தின் பொது மொழியாவதற்கு, இந்தியைவிட பல்வகையிலும் வேறு வளமுள்ள இந்திய மொழிகள் இருந்துவருகின்றன என்றும், அம்மொழிகளில் ஏதாவது ஒன்று பொது மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு மொழியைப் பரப்புவதில் இந்திக்குத் தேவைப்பட்டு வருவதைவிடக் குறைவான முயற்சிதான் தேவைப்படும் என்றும் நேற்று குறிப்பிட்டிருந்தோம்.

தற்காலத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், ஏற்கனவே வளம் பெற்றுள்ள மொழிகளில் சிறந்து விளங்கும் ஒரு மொழியைப் பொதுமொழியாக்க முன்வருவதுதான் நேர்மையும் விரும்பத்தக்கதும் ஆகும் என்றும் முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கும் உத்திரப் பிரதேசத்தாரும், பிகாரிகளும் இன்று இந்தியப் பேரரசில் ஆதிக்கம் செலுத்திவருகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். அவர்களுடைய வற்புறுத்தலுக்கு இணங்க, அவர்களுக்குத் திருப்தி ஏற்படுத்தும் வகையில் இந்தி ஆட்சி மொழியாக ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால், எதிர்காலத்தில் அப்பகுதியினர் ஆதிக்கம் மேலும் வலுப்பெறுவதற்கு வழி செய்ததாகிவிடுகிறது.

இந்தியை இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டதின் மூலம், இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களைவிட, தாய்மொழியாகக் கொண்டிருக்கும் அப்பகுதியினர், மற்றவர்களைவிட அதிகமான அரசாங்கப் பதவிச் சலுகைகளைப் பெறுவது எதிர்பார்க்கக்கூடியதே. மற்ற மாகாணங்களுக்கு எதிராக, இந்தி மொழி மாகாணத்தவர்களுக்குச் செய்து தரப்படும் இந்தச் சலுகை, வேண்டுமென்றே மற்ற மாகாணத்தவர்களுக்கு இந்தியப் பேரரசு இழைக்கும் பெருங்கேடாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் மீது, இந்தியைத் திணிப்பதில் இந்தி மாகாணத்தவர்களான பிகாரிகளும் உத்திர பிரதேசத்தாரும் மூர்க்கத்தனமாகப் பிடிவாதம் காட்டி வருகிறார்கள். அவ்வாறு அவர்கள் பிடிவாதம் காட்டுவதே இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள், ஆங்கிலமொழி கற்றுள்ளதினால் பெற்றுள்ள [illegible] முறபோக்கைக் [illegible] குட்டிச்சுவராக [illegible] யாகும் எனக் [illegible] மிகையாகாது.

இந்தியை [illegible] லது வ[illegible] திணிக்க[illegible] [illegible] வது, தேச [illegible] தேசத் து[illegible] என்றும், இந்திய ஒற்றுமையை சீரழிக்கக்கூடிய போக்கு என்றும் உத்திரப் பிரதேசத்தார் உறுமி வருகின்றனர். அவர்களுடைய தேசப்பற்றையும், ஒற்றுமையைக் கட்டி வளர்க்கும் நினைப்பையும் சோதித்துப் பார்க்க ஒரே ஒரு வழி இருக்கிறது.

அதாவது, வேறு வளமுள்ள மொழிகளாக இருந்துவரும் தமிழ், குசராத்தி, மராட்டி, வங்காளம் போன்ற மொழிகளில் ஏதாவது ஒன்றை, இந்திக்குப் பதிலாக இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கோரப்பட்டால் அல்லது முயற்சிக்கப்பட்டால், அம்மொழிகளும் இந்தியைவிட வளமுள்ள இந்திய மொழிகள்தானே, அவைகளும் இந்தியைப்போல் பொதுமொழியாவதற்கு உரிமை கொண்டிருப்பவைகள்தானே என எண்ணி, அதனை வரவேற்க உத்திரப் பிரதேசத்தார் ஒருக்காலும் முன்வரமாட்டார்கள். அதற்கு மாறாக, இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக ஆங்கில மொழியே இருந்து வரட்டும் எனக்கூறும் அளவிற்கு உத்திரப் பிரதேசத்தாரின் பிறமொழி எதிர்ப்பு சென்றுவிடக்கூடும். அந்த அளவிற்கும் செல்லக்கூடிய வகையில் அவர்களுடைய இந்தி மொழிவெறி இருந்துவருகிறது.

இந்தி மொழித் திணிப்புக்கு தமிழ் நாட்டில் மட்டுமே எதிர்ப்பு இருந்துவருகிறது எனக் கொள்ளுவது தவறு. இந்திக்கு முதல் முதலாக எதிர்ப்பு தோன்றிய இடமே வங்காளம் என்பதை நாம மறந்துவிடக்கூடாது.

இந்தி மொழியைத் தமிழ்நாட்டு மக்கள் மீது திணிப்பதின் மூலம், திராவிடப் பண்பாட்டை உருத்தெரியாமல் சீரழித்துவிடக் கூடும் என்பது உத்திர பிரதேச இந்தி வெறியர்களின் உள்ளக்கிடக்கை. முன்னோர்கள் முயன்று பார்த்துத் தோற்றுப் போனதை, இந்தி மொழி மூலம் தங்கள் காலத்தில் சாதித்துவிட முடியும் என இந்த உத்திரபிரதேசத்தார் நம்புகின்றனர். இந்தித் திணிப்பில் மறைந்து இருப்பது இந்த ஆபத்தான போக்குதான் என்பதைக் கருதி, இந்தித் திணிப்பை நாம் முழுமூச்சுடன் எதிர்த்துப் போராடி ஆக வேண்டும்.

இந்தித் திணிப்பு இருகூரிய முனைகொண்ட கத்தியொன்றதாகும். அதன் வெற்றி, இந்தியத் துணைக் கண்டத்தைத் துண்டுகளாக்குவதிலேயே வந்து முடிவுறும் என்பது [illegible] உறுதியாகும்.

[illegible] விடுதலைப் [illegible]
உத்திரசம் [illegible]

[illegible]

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி; பாரதத்திற்கு இளைத்தவன் தமிழனா?'

'பிரிட்டிஷாரின் நாற்றம் டெல்லித் தலைமை இடத்திலிருந்து அகலவில்லையா?'

'எல்லைக் கமிஷன் தருவோம் என்ற உறுதிமொழி எங்கே?

'சொந்த நாட்டில் நீதி காக்கத் தவறியவர்கள் உலகுக்கு சமாதானப் போதனை புரிவதா?'

"தமிழ் நாட்டின் வட எல்லைப் பகுதிகள் பற்றிய விவகாரம் நீடித்துக்கொண்டே போகிறது. வடவெல்லை மட்டுமென்ன— தென் மேற்கிலும் விவகாரத்திற்கு இடம் விட்டு வைத்திருக்கின்றார்கள். 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்றால், 'பாரத நாட்டிற்கு இளைத்தவன் தமிழ் நாட்டான்' போலிருக்கிறது!

"ஆந்திர, கன்னட, கேரள, தமிழ் நாடுகள் கொண்ட சுதம்ப மாகாணமாக சென்னை இருந்த வரைக்கும் தமிழ் நாட்டான் மிகுந்த கவலை கொள்ளவில்லை. பாஷைப் பிரிவினை என்று வந்துவிட்டால், நியாயமான முறையில் எல்லைப் பிரிவினை நடைபெற வேண்டியதுதான் ஒழுங்கு.

"ஆதை நிறைவேற்றுவதில் வீண் காலங் கழித்தலோ, மறுத்தலோ காணப்படுமானால், அதற்குக் காரணமாயிருப்பவர்கள் மீது குற்றம் சுமத்துவதில் தவறிருக்க முடியாது.

"தமிழ் நாடு தனி மாநிலமாக இருக்கவேண்டும் என்ற ஆவல் தமிழ் மக்களுக்கு இருந்தபோதிலும், அதற்காகக் கவலை, பலாத்காரம் முதலானவற்றில் ஈடுபடவில்லை. 'பிரிந்து போகின்றவர்கள் போகட்டும்; பின்னால், நமக்குரிய தமிழ் நாடு நீதி முறைப்படி கிடைக்கும்—அல்லது கிடைக்கும்' என்று அவர்கள் நம்பிவந்திருக்கிறார்கள்.

"அவர்களுடைய பொறுமையையும், நம்பிக்கையையும் சிதைக்கும் வகையில் இராஜ்யங்கள் பிரிவினைக்கு மூல கர்த்தாக்களாயுள்ள மத்திய அரசாங்கத்தினர் நடந்து கொள்கின்றனர். பிரிட்டிஷார் இருந்த காலத்தில் அவர்கள் கையாண்ட காலம் கடத்தல், பொறுமையைச் சோதித்தல், மழுப்பல், திரித்தல் போன்றவற்றின் நாற்றம் டில்லி தலைமையிடத்திலிருந்து அகலவில்லையோ என்று ஐயங்கொள்ள வேண்டியிருக்கிறது.

"ஆந்திரா—சென்னை இராஜ்யங்கள் எல்லை விவகாரம் தீர்க்கப்படவேண்டியதற்கும், இராஜ்யங்களின் புனரமைப்புக்கும் எவ்வித நியாயத்துக்கொத்த தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இதை மத்திய அரசாங்கம் தெரிந்துகொள்ளவில்லை என்றோ, உணர்ந்துகொள்ளவில்லை என்றோ நம்புவதற்கில்லை.

"சமரசப் பேச்சுகள் மூலமாக இரு ராஜ்யத் தலைவர்களும் நல்ல முடிவு காணுவிடில், எல்லைக் கமிஷன் நியமிக்கப்படலாம் என்று மத்திய சர்க்கார் சார்பாக பிரதம மந்திரியவர்கள் உறுதிமொழி சொன்னதுண்டு; ஆனால், இரு இராஜ்யத் தலைவர்களின் பேச்சு வார்த்தைகள் முறிவு கண்ட பிறகும், மத்திய சர்க்கார், சொன்ன சொல்லைச் செயல்படுத்த முன்வராமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க செய்தியாகும்.

"எல்லைப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், இன்றுள்ள நிலையில், தமிழ் நாட்டினர் இழிவுபடுத்தப்படுகின்றனர் — ஏமாற்றப்படுகின்றனர்!

"'அழுதால் பெறலாம்—கேட்டால் பெறலாம்' என்ற மகான்களின் மொழிகளைத் தமிழர் பின்பற்றி வந்துள்ளனர்; மற்றவர்கள், 'அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்' என்ற நாட்டுப்புற மொழியைக் கடைப்பிடித்தனர். நமது அரசியலில், பிந்தியதுதான் பலனளித்து வந்திருப்பதாய்த் தெரிகின்றது. எனவே, 'நீதி வழுவா நெறி முறைக்கு இடம் எங்கே, எங்கே?'—என்று கேட்பவர்களுக்கு, 'காந்தி மகான் கற்பித்த வழி நிற்பவர்கள்' என்று சொல்லிக் கொள்பவர்கள் எவ்வாறு நேரான பதில் தர முடியும்?

"தானமும் தருமமும் தொடங்க வேண்டியது தன் வீட்டில்—என்பதுண்டு; அதேபோல், நீதியும் அமைதியும் காக்கப்பட வேண்டிய முதல் இடம், சொந்த நாடு! அகத்தே நிம்மதியில்லாமல், புறத்தே சமாதானப் புலம்பல் புலம்பினால் தேசீய நேர்மைக்கே இழுக்காகும்.

"சலனம் குறைந்திருந்த குட்டையைக் குழப்பிவிட்டு, அதிலிருந்து கிளம்பும் தீய நாற்றத்தைத் தணிக்காமல் விலகிவிடுவதோ அல்லது குட்டையின் மீதே பொறுப்பைச் சுமத்திவிடுவதோ பொருத்தமான செய்கை யல்ல."

—'நவ இந்தியா': 22-10-56

வித்தியாசத்திற்குக் காரணம் என்ன?

"இப்போதுள்ள பரீட்சைமுறை மாணவர்களின் மனப்பாடசக்தியை மட்டும் விருத்திசெய்வதாகவிருக்கிறது; ஆகவேதான் நம் நாட்டு மாணவர்களுக்கும்—அயல் நாட்டு மாணவர்களுக்குமிடையே தரத்தில் அதிக வித்தியாசம் காணப்படுகிறது"

[illegible] மாணியக் [illegible] தேஷ்முக், டெல்லியில் [illegible] இந்திய [illegible] பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

[illegible] இருவுலிருக்கும் பரீட்சை முறைகளை மாற்றி வேறு [illegible], புதிய முறைகளைப் பின்பற்றுவது பற்றி யோசித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலப் புதிய அமைப்புக்குப்பின்னர்!

தமிழை ஆட்சி மொழியாக்க நடவடிக்கை எடுப்பார்களாம்

"மாநிலப் புது அமைப்பிற்குப் பின்னர் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்,"

என்று, அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநிலத்தில் பசு வதைத் தடுப்பு

பசு வதையை இந்த மாநிலத்தில் தடை செய்வதற்கு சென்னை அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக சட்டசபையில் அமைச்சர் பக்தவத்சலம் அறிவித்தார்.

சிமெண்டுவிற்பனையில் 'கள்ள மார்க்கெட்'

அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமாம்

சென்னை, அக். 23—

சென்னை மாநிலத்தில் ஏற்பட்டுள்ள சிமெண்டு பற்றாக்குறையை நீக்குவதற்கு மத்திய அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து சிமெண்டு தருவித்து உதவுமென்று தெரிய வருகிறது.

சிமெண்டு விற்பனையில் கள்ள மார்க்கெட் நடைபெறுவதை தீவிர நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் ஒழித்துவிடப்போகிறதாம்.

மக்களுக்கு நியாய விலையில் சிமெண்டு கிடைக்கும் அளவிற்கு நிலைமையைச் சீர்படுத்த அரசாங்கம் முயலுமாம்.

"சென்னை மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் சிமெண்டு ஏற்றுமதி செய்வதும், இரயில்வே இலாகாவுக்கு அதிகமாக சிமெண்டு தேவைபடுவதுமே சென்னை மாநிலத்தில் சிமெண்டு பற்றாக்குறைக்கு முக்கிய காரணங்களாகும்" என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சென்னை மராமத்து இலாகா அமைச்சர் இராமநாதபுரம் இராசா சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

'நிறைய மழை பெய்திருப்பதால் விளைச்சல் அதிகரிக்கும்'

டில்லி அமைச்சர் சென்னையில் கூறுகிறார்

சென்னை, அக். 23—

கடந்த தினங்களில் சென்னை மாநிலத்தைச் சுற்றிவந்து, உணவுப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதாகப் பேசி, 'அரிசி விலை குறைந்த பிறகே டில்லி திரும்புவேன்,' என்று பசப்பு வார்த்தை பேசிச் சென்ற டில்லி அமைச்சர் மீண்டும் சென்னை வந்துள்ளார்.

நாடெங்கும் அரிசி விலை உயர்ந்துகொண்டே போகிறதல்லவா? இதைக் குறித்து சென்னை அரசாங்க உணவு இலாகா அதிகாரிகளுடன் அவர் விவாதம் நடத்தினார் என்று தெரிகிறது.

"இங்கு நிறைய மழை பெய்திருப்பதால், இந்த ஆண்டு விளைச்சல் அதிகரிக்கும்," என்று அவர் கருதுவதாக நிருபர்களுக்குஅளித்த பேட்டியில் அந்த அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அலுத்துவிட்டார் பண்டித நேரு!

பல்கலைக் கழக இளைஞர் விழாவை இன்று பண்டித நேரு துவக்கிவைத்தார். எப்போதும் அவர் நீண்ட பிரசங்கம் செய்வது வழக்கமல்லவா? இந்த விழாவில் அவர் ஏதும் பேசவில்லை; அது மட்டுமல்ல; 'இந்தக் காலத்தில் எதற்கெடுத்தாலும் பிரசங்கம் செய்வது ஒரு பழக்கமாகிவிட்டது; எங்கு போனாலும் பேசுவது அவ்வளவு நல்லதல்ல' என்று அவர் கூறினாராம்!

'கருத்தைச் சொல்லுவது நல்லதுதான்; ஆனால், மற்றவர்களிடமிருந்து எதையும் கற்றுக்கொள்ளாமல் மீண்டும் மீண்டும் தன்னுடைய கருத்தையே சொல்லிக்கொண்டிருப்பது தவறாகும்' என்று வேறு அவர் அலுத்துக்கொண்டாராம்.

82 நாடுகளின் குரல்!

நியூயார்க், அக். 23—

'அணுசக்தியை ஆக்கவேலைக்கு பயன்படுத்த ஐ. நா. குழு ஒன்று நிறுவப்பட வேண்டும்' என்று 82 நாடுகளின் பிரதிநிதிகள் ஏகமனதாக முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

தூங்குவதற்கு இடவசதியாம்!

சென்னை, அக் 23—

எல்லா இரயில்களிலும் மூன்ரும் வகுப்புப் பெட்டிகளில் பிரயாணிகள் தூங்குவதற்கு இடவசதியளிப்பது பற்றி இரயில்வே போர்டு பரிசீலித்து வருகிறதாம்.

மூன்ரும் வகுப்புப் பெட்டிகளில் மடக்கக்கூடிய படுக்கை, பலகைகள் வசதிக்காக ரூ. 3 வசூலிக்கப்படுமாம்.

இந்தத் தொகை மிகவும் சொற்பமானதாகும் என்று தான் கருதுவதாக இரயில்வே அமைச்சர் கூறியுள்ளார்.

விஞ்ஞானம் வளருகிறது!

அமெரிக்காவைச் சேர்ந்த அட்லாண்டிக் சிடி, நியூ ஜெர்சியில் நடைபெறும் அமெரிக்கப் பல் வைத்திய சங்கத்தின் 97-வது வருடாந்திர மகாநாட்டிற்கு வந்துள்ள பிரதிநிதிகளிடம், இறகினுல் தொடுவது போன்ற உணர்ச்சியளிப்பதும், வர்ண பிரஷ் போன்றதும், துரிதமாக இயங்கிப் பல்லில் துவாரமிடுவதுமான ஒரு புதுவகை ஊசி பற்றி விளக்கம் தரப்பட்டுள்ளது.

சாதாரண துவாரமிடும் ஊசி, நிமிடத்திற்கு 6,000 முறை சுழலுகிறது; ஆனல் இந்த ஊசி, நிமிடத்திற்கு 1,50,000 முறை சுழலுகிறது என குறிப்பிடப்பட்டது.

சிகிச்சை எங்கு நடைபெறுகிறது என்பதே நோயாளியால் கண்டுபிடிக்க முடியாதாம்!

• • •

'பல் பாங்கு' ஏற்படும்!

உயிருள்ள மனிதர் பற்களை இன்னொருவருக்கு மாற்றி அமைப்பதற்கும் அவைகளை சேமித்து வைக்கவும் வசதியளிக்கும் 'பல் பாங்கி'யை ஏற்படுத்துவது பற்றி முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவாம்.

இந்தத் திட்டம் வெற்றி அடைந்தால், கஷ்டமான பற்களுக்கு 'செயற்கை பாலங்கள்' அமைப்பதைத் தவிர்க்க முடியுமாம்!

• • •

பிளாஸ்டிக் சிறுநீரகம்!

சான்பிரான்சிஸ்கோவில் இரத்த விஷத்தால் மரணம் ஏற்படாதபடி தடுப்பதற்கு எளிமையான ஒரு செயற்கைச் சிறுநீரகம் கண்டுள்ளனர்; அதனை விழுங்கிவிட்டால் ஆபத்து நீங்கும்.

அது இன்னும் ஆராய்ச்சி நிலையில்தான் உள்ளது என்ருலும், இரண்டு சிறு நீரகங்களும் நீக்கப்பட்டபோதிலும் நாய்களை அந்தச் செயற்கைச் சிறுநீரகம் காப்பாற்றியுள்ளது.

மெல்லிய ஒரு பிளாஸ்டிக் கூடுதான் இந்தச் செயற்கைச் சிறுநீரகம்; இதை விழுங்கியபின், அது இரத்தத்தைச் சுத்தப்படுத்தச் சரியான சிறுநீரகம்போல் வேலை செய்வதற்கு அது ஒரு விசேடப் பொருளால் நிரப்பப்படும். அது சிறுகுடலில் சேர்ந்ததும் வேலை செய்யும்.

• • •

டெலிபோன் மூலமாய் படிப்பு

நியூயார்க்கில் இளம்பிள்ளை வாதத்தால் வருந்தும் 22 வயதுப் பெண் செயற்கை மூச்சுக் கருவியின் உதவியால் சுவாசித்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இருக்கிருர். கல்லூரிப் படிப்புப் பெற வேண்டுமென்பது அவரது கனவு அது நனவாவதற்குத் தற்கால விஞ்ஞானமும் சமுதாய ஒத்துழைப்பும் அவருக்கு உதவி செய்யப்போகின்றன. அவர் சமூக இயல் படிக்கத் தொடங்ுவார்; டெலிபோன மூலம் அவர் வகுப்பறை நிகழ்ச்சியில் கலந்துகொள்வார்.

செய்தி அனுப்பிச் செய்தி பெறும் நிலையம்' அவரது படுக்கையில் பொருத்தப்படும். வகுப்பறை விரிவுரைகளையும் விவாதங்களையும் அவர் கேட்க அது வழிசெய்யும். பொத்தானை அழுத்தி அவர்,பாடங்களைத் திருப்பிச் சொல்ல முடியும்.

சென்னை சட்டசபை

ஒரு கண்ணேட்டம்

1952-ல் சென்னை சட்டசபையில் 375 உறுப்பினர்கள் இருந்தனர்.

1953-ல் ஆந்திரம் பிரிந்த பிறகு 231 ஆகக் குறைந்தது.

1956 நவம்பர் முதல் இந்த எண்ணிக்கை 190 ஆகக் குறைந்துவிடுகிறது

சபாநாயகர் கோபாலமேனன் உட்பட 30 மலையாள உறுப்பினர்களும், சுகாதார அமைச்சர் ஹெட்டி உட்பட 11 கன்னட உறுப்பினர்களும் இப்போது பிரிந்துவிடுகின்றனர்.

நேற்று மலையாள - கன்னட எம் எல். ஏ -க்கள் கலந்துகொண்ட கடைசி சட்டசபைக் கூட்டம் நடைபெற்றது.

சட்டசபைத் தலைவர் உருக்கமுடன் பேசுகையில், 'பல நூற்ருண்டுகளாக ஒன்றுபட்டிருந்த நாங்கள் இப்போது பிரிந்து போவது வருத்தமாகயிருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

'உலகப் புதுமைகள் அத்தனையும் கண்டவர்கள் நாம்'

தமிழரின் பழம் பெருமையை எடுத்துரைக்கிருர் விசுவநாதம்

மதுரை, அக். 23—

"உலகத்தில் ஏற்பட்டுள்ள அத்தனை புதுமைகளையும், முதலில் கண்டவர்கள் தமிழர்கள்; பின்னுல் அது மற்ற நாட்டுக்காரர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

"உலகில் உள்ள சுமார் 2,000 - மொழிகளில் இலக்கண—இலக்கிய வளமுள்ள மொழிகள் ஆயிரம்தான்; அவற்றிலுள்ள நூல்களில் மதச் சார்புடையவற்றை நீக்கிப் பார்த்தால் திருக்குறள் ஒன்றுதான் முதலிடம் பெறக்கூடியது.

"கட்டிடக் கலையிலும், கவிதை புனைவதிலும், தமிழர்களுக்கு இணை எவருமில்லை."

இவ்வாறு, பண்டையத் தமிழினத்தின் பெருமையை, அமெரிக்கன் கல்லூரியில், 'தமிழன் கண்டவை' என்ற தலைப்பில் பேசுகையில், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் குறிப்பிட்டார்

மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:—

"பறவை போன்று ஆகாயத்தில் பறக்கக் கற்றுக்கொண்டவர்கள் மேல் நாட்டவர்கள்; கடலுக்குள் மீனைப் போன்று வாழக் கற்றுக் கொண்டவர்கள் கீழ்நாட்டவர்கள்; தாடி, மீசையுடன் விலங்குகளைப் போன்று காடுகளில் வாழக் கற்றுக் கொண்டவர்கள் வடநாட்டுக்காரர்கள்; ஆனல், பெண்டு பிள்ளைகளுடன் நாட்டில் குடும்பமாக வாழக் கற்றுக்கொண்டவர்கள் தமிழர்கள்தான்.

"அறிவு என்பதுமுதலில் ஆசியா கண்டத்தில் தோன்றிய பிறகே மற்ற நாடுகளுக்குப் பரவியது."

தமிழ் மொழியைக் குறித்து அவர் பேசுகையில், 'தமிழ் மொழித்தான் உலகில் முதன் முதலில் தோன்றிய மொழி என்பதை, இதுவரை மேல்நாட்டார் எவரும் மறுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினர்.

அநீதிக்கு எதிராக 'மரண'ப் போராட்டம்

தென்னுப்பிரிக்க இந்தியருக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை

"இதற்குமுன் கேட்டறியாத அளவுக்குத் தென்னுப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களுக்கும் பெரியதோர் பயமுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது"

என்று, தென்னுப்பிரிக்க இந்திய காங்கிரஸ் அதன் செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கை குறிப்பிடுகிறது.

"இன ஒதுக்கல் சட்டத்தின்கீழ் எல்லா இந்தியர்களையும் தேர்ச்சியற்றக் கூலிகளாக ஒதுக்குவதற்கு அரசாங்கம் சூழ்ச்சி செய்துவருகிறது. பல வர்த்தக நிறுவனங்களைக் கைப்பற்றுவதும், இந்தியர்களை சமூக—கலாச்சாரத் தொடர்பின்றி ஒதுக்கிச் சேரிகளில் வாழச்செய்வதுமான நிலைமையை அச்சட்டத்தின்கீழ் இணைப்பதற்குச் சர்க்கார் முற்பட்டிருக்கிறது.

"மக்களுடைய புனிதமான உரிமைகள் புறக்கணிக்கப்படுகிறது. தென்னுப்பிரிக்க அரசியல் சட்டம் முற்றிலும் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலைமைக்கு எதிராக நடத்தும் போராட்டம், வாழ்வு அல்லது சாவுக்கு நடத்தும் போராட்டமாகவே இருக்கும்" என்ற அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி:

சென்னை மாவட்டத்தில் தேர்தல் ஆய்வுக்குழுவின் விசாரணை

28—10—56 ஞாயிறு காலை 'அறிவக'த்தில் நடைபெறும்

சென்னை மாநிலத்திலுள்ள எல்லாத் தொகுதிகளில் தேர்தல் சூழ்நிலையை அறியத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் 28-10-56 காலை 9-மணிக்கு இராயபுரம் 'அறிவக'த்தில் தங்களின் பணியைத் துவக்குவார்கள்.

விசாரணை கீழ்க்கண்ட வரிசைப்படி நடைபெறும்

ஒவ்வொரு தொகுதியிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், தேர்தல் சூழ்நிலையை தெரிவிக்கக்கூடிய முக்கியஸ்தர்கள் அனைவரும் ஆய்வுக் குழுவின் முன் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஒவ்வொரு தொகுதியிலிருந்துவரும் தோழர்கள் தேர்தலைப் பற்றிய விவரம் தருவதில் ஒத்த கருத்துடையவர்களாயிருப்பின் சேர்ந்தோ, இல்லையெனில் தனித்தனியாகவோ ஆய்வுக் குழுவின் முன் தங்களின் எண்ணத்தைத் தெரிவிக்கலாம். ஆய்வுக்குழுவின் பணி இனிது நிறைவேறும் வகையில், அந்தந்தத் தொகுதியிலிருந்து வரும் தோழர்கள், தேர்தல் சூழ்நிலை பற்றிய விவரங்களை அறிந்து வருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

★

1. வண்ணைத் தொகுதி:
புது வண்ணை, இராயபுரம், சிங்காரத்தோட்டம், சஞ்சீவிராயன்பேட்டை வட்டங்கள்.

2. ஆர்பர் தொகுதி:
ஏழுகிணறு, அம்மன்கோயில், முத்தியாலுப்பேட்டை, ஆர்பர், கச்சாலீஸ்வரர் கொத்தவால்சாவடி, சவுக்கார் பேட்டை, போர்ட்செயின்ட் ஜியார்ஜ் வட்டங்கள்.

3. பேசின்பிரிட்ஜ் தொகுதி:
கொருக்குப்பேட்டை, பேசின்பிரிட்ஜ், பெத்துநாய்க்கன்பேட்டை, டிரிவிலியன் பேசின், எடப்பாளையம் வட்டங்கள்.

4. பெரம்பூர் தொகுதி:
வியாசர்பாடி, சூளை, புளியந்தோப்பு, பெரம்பூர் பாரக்ஸ், செம்பியம், அயன்புரம், புரசைவாக்கம், குயப்பேட்டை வட்டங்கள்.

5. ஆயிரம்விளக்குதொகுதி
கீழ்ப்பாக்கம், ஆயிரம் விளக்கு, நுங்கம்பாக்கம், இராயப்பேட்டை, புதுப்பாக்கம் வட்டங்கள்.

6. எழும்பூர் தொகுதி:
வேப்பேரி, பெரியமெட்டு, பார்க் டவுன், நேப்பியர் பார்க், சிந்தாதிரிப்பேட்டை, கோமளீஸ்வரன்பேட்டை, எழும்பூர் வட்டங்கள்.

7. திருவல்லிக்கேணி தொகுதி:
திருவட்டீஸ்வரன் பேட்டை, சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, ஜாம்பஜார், மீர்சாகிப்பேட்டை வட்டங்கள்.

8. மயிலாப்பூர் தொகுதி:
மயிலை வடக்கு, மயிலை தெற்கு, தேனும்பேட்டை, அடையாறு வட்டங்கள்.

9. தியாகராயநகர் தொகுதி:
கோடம்பாக்கம், தியாகராய நகர் வடக்கு, தியாகராய நகர் தெற்கு, சைதாப்பேட்டை, கிண்டி வட்டங்கள்.

★

28—10—56 காலை 9 மணிக்குச் சரியாய் ஆய்வுக் குழுவின் பணி துவங்கப்படுமாதலால், அந்தந்தத் தொகுதியிலுள்ள தோழர்கள் குறித்த நேரத்திற்குள் 'அறிவகம்' வருமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கே. வி. கே. சாமி கொலை வழக்கு

தேடப்பட்ட மற்ரெரு எதிரி சரண்

தூத்துக்குடி, அக். 24—

தூத்துக்குடித் தோழர் கே. வி. கே. சாமி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்று போலீசாரால் தேடப்பட்டு வந்தவரும், தலைமறைவாக இருந்துவந்தவருமான பாண்டியத் தேவர் என்பவர், நேற்று திருச்செந்தூர் சப்-மாஜிஸ்திரேட்டிடம் சரணடைந்தார் என்று தெரிகிறது.

இத்துடன் இந்தக் கொலை சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் போலீசார் கைது செய்துவிட்டதாகவும், மேற்கொண்டு வழக்கு தொடருவதில் தாமதம் ஏதும் இருக்காதெனவும் கூறப்படுகிறது

2100 தொழிலாளருக்கு ரூ. 6 லட்சம் போனஸ்

மேட்டூர் ஆலைநிர்வாகத்தினர்முடிவு

மேட்டூர், அக். 23—

கடந்த 1954—55-ம் ஆண்டில், மேட்டூர் ஆலைத் தொழிலாளர்—நிர்வாகிகளிடையே 'போனஸ்' குறித்து எழுந்த தகராறுக்கு, பம்பாய் தொழில் அப்பீல் கோர்ட் 6 மாத 'போனஸ்' கொடுக்குமாறு ஆலை நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டு தீர்ப்பு வழங்கினது.

இப்போது 1955—56-ம் ஆண்டிற்கும் சென்ற ஆண்டைப் போலவே தீபாவளிக்கு முன்னதாகத் தொழிலாளர்களுக்கு 6 மாதப் 'போனஸ்' தரவேண்டுமென்று கடந்த 17-ந் தேதியன்று ஆந்திரியத் தேசியத் தொழிற் சங்கம் அவ்வாலை நிர்வாகத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தித் தங்கள் கோரிக்கையை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட மேற்படி ஆலை நிர்வாகம், இத்திங்கள் 27, 28-ந் தேதிகளில் ஆலைத் தொழிலாளர் அனைவருக்கும் 6 மாத 'போனஸ்' கொடுக்கவிருப்பதாக நேற்று முன்தினமே அறிவித்துவிட்டிருக்கின்றனர்.

ஆலை நிர்வாகிகளுடைய இந்த முடிவினுல், அங்கு வேலை செய்யும் 2,100 தொழிலாளர்களுக்கும் சுமார் ரூ. 6 இலட்சங்களை தீபாவளிக்கு முன்னதாகவே 'போனஸ்' தொகையாக வழங்கப்பட்டுவிடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ந. நி.)

பத்தாம் வகுப்பு வரை இலவசக் கல்வி

'எல்லா பின்தள்ளப்பட்ட மக்களுக்கும் தரப்படவேண்டும்'

காமராசர் விரும்புகிருராம்

சென்னை, அக். 23—

"இப்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தரப்படுவதைப்போன்றே பத்தாம் வகுப்புவரை இலவசக் கல்விச் சலுகை எல்லா பின்தள்ளப்பட்ட வகுப்பினருக்கும் தரப்படவேண்டுமென நான் விரும்புகிறேன்.

"மருத்துவர், மற்றும் சலவையாளர் வகுப்பினருக்குக் கட்டாயம் இந்தச் சலுகை வேண்டும் என்று சென்னை சர்க்கார் டில்லிக்கு சிபாரிசு செய்திருக்கிறது"

என்று, முதல் மந்திரி காமராசர் மருத்துவர் மாநாடு ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டிருக்கிருர்.

ஏழை மாணவர்கட்கு

இலவச இடைவேளை உணவு

அரவக்குறிச்சி, அக். 23—

கரூர் தாலுகாவைச் சேர்ந்த அரவக்குறிச்சி மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளியில் பயின்று வரும் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக இடைவேளை உணவு தரப்பட்டு வருகிறது.

இந்த இலவச உணவளிப்புத் துவக்க விழாவை, கடந்த 15-ந் தேதியன்று பொறியியல் கல்வி அதிகாரியான திரு. கல்லாரஜ் அவர்கள் துவக்கிவைத்திருக்கிருர். ஏழை மாணவர்களுக்கு, இலவசமாக உணவு அளிக்கப் பொருளுதவி தந்த பெருமக்கள் அனைவருக்கும் மேற்படி பள்ளித் தலைமை ஆசிரியர் நன்றி தெரிவித்தார். (ந. நி.)

பதவி காலம் நீடிப்பு

திருவாங்கூர் பல்கலைக் கழகத்தின் தலைவராக டாக்டர் ஏ இராமசாமி முதலியார் வரும் 15-ந் தேதி முதல் மேலும் ஒரு ஆண்டு பதவியில் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கே. ஏ. மதியழகன்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

விடத்தில் தகவல் தர விரும்பினர்களோ அவர்களை எல்லாம் சந்தித்துத் தகவல்களைப் பதிவு செய்தோம்.

"ஒரே கருத்துடையவர்கள் படை படையாக—கூட்டம் கூட்டமாக வந்து கருத்தறிவித்தார்கள். தனியாகத்தான் கருத்தறிவிக்க வேண்டும் என்றவர்கள், எங்களைத் தனியாகச் சந்தித்து கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். இப்படிப் பல்லாயிரம் பேரின் கருத்துக்களை நாங்கள் பதிவு செய்திருக்கிறோம். அதிலிருந்து நாங்கள் கண்டதெல்லாம், நாட்டில் நல்லதோர் ஆட்சி அமைய, தி. மு. க-வைத்தான் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதைத்தான்,"

—என்று தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் நேற்று சென்னை சிறப்புக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

என். வி. நடராசன்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வந்து அண்ணா அவர்களிடம் முறையிடுவது போலவும், இன்னவாறுகப் பலவும் எழுதினர்.

"அவருக்கும், அவர் போன்று நம் வளர்ச்சி கண்டு பொறாதவர்களுக்கும், நாம் தேர்தலில் ஈடுபடுவது கேட்டு ஆத்திரப்படும் மாற்றார்களுக்கும், இங்கே அண்ணா அவர்கள் அறிவித்த செய்தி நல்ல பாடம் புகட்டும் என்று நம்புகிறேன்.

"இனிமேலாகிலும் அவர்கள் இதுபோன்று எழுதி மூக்கறுபடாமலிருக்க வேண்டும் என்று நாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல விழைகிறோம்.

"இந்த நாட்டை ஆளும் காமராசர் சர்க்கார், எல்லாத் துறைகளிலும் இந்த நாட்டின் தன்மானத்தைக் காக்கத் தவறிவிட்டிருக்கிறார்கள் என்பதால், நாட்டவர் கொண்டுள்ள கோபத்தையும் ஆத்திரத்தையும் எங்களால் நன்கு அறிய முடிந்தது. அவர்கள் எல்லாம், வரப்போகும் பொதுத் தேர்தலில், ஆணவப் போக்குடைய இந்த காமராசர் சர்க்காருக்குத் தகுந்த பாடம் புகட்டவும் தயாராயிருக்கிறார்கள் என்பதையும் அறிந்தோம்.

"நாங்கள் கண்டறிந்த சூழ்நிலைகள், நாட்டை ஆளும் சர்க்காரின் ஆணவப் போக்கினை முறியடிக்கப் போதுமானவை என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன்."

—என்று, தோழர் என். வி. நடராசன் அவர்கள், சென்னையில் நேற்றைய சிறப்புக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

ஆந்திர காங்கிரஸ் தலைவர் தேர்தலில் பணம் பட்டபாடு!

சஞ்சீவி ரெட்டி தலைவரான விதம்பற்றி 'ஜனசக்தி' !

கர்னூல், அக். 24—

ஆந்திரப் பிரதேசக் காங்கிரஸ் சட்டசபைத் தலைவர் பதவிக்கு சஞ்சீவி ரெட்டி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளதல்லவா? இந்த ஏகமனதான தேர்தலுக்குப் பின்னல், திரை மறைவில் நடைபெற்ற பல விஷயங்கள் தற்போது அம்பலமாகியுள்ளன.

பின்னணியில் 'பணமூட்டை'கள்

ஆந்திராவிலே உள்ள பெரும் 'பணமூட்டை'களிலே பலர் சஞ்சீவி ரெட்டியை ஆதரித்ததாகவும், அதே போன்று வேறு பல செல்வந்தர்கள் கோபால் ரெட்டியை ஆதரித்ததாகவும் தெரிகிறது.

இந்தப் போட்டியில் தங்கள் தங்கள் அபேட்சகர் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக இந்தப் 'பணமூட்டை'கள் பணத்தைத் தண்ணீராக வாரி இறைத்தார்களாம்!

கோபால் ரெட்டி கோஷ்டியினர் ஒரு 'ஓட்'டுக்கு ரூ. 15 000 என்று பேரம் பேசினல், சஞ்சீவி ரெட்டி கோஷ்டியினர் இதற்குச் சளைக்காமல், ஒரு 'ஓட்'டுக்கு ரூ. 25,000 தர முன் வந்தார்களாம்!

இதன்றி, வோட்டு சேகரிப்பதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து ஆங்காங்கு பெரிய பெரிய விருந்துகள் நடத்தினர்களாம்!

—'ஜனசக்தி' : 24—10—56

அண்ணா கருத்துரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் சொன்னார் :—

"தேர்தல் ஆய்வுக் குழுவினர், நமது பொதுச்செயலாளர் தலைமையில் கடந்த 12 நாட்களாகத் தமிழகமெங்கணும் சுற்றுப் பயணம் செய்து, தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுவதற்குரிய வாய்ப்புகளை எல்லா மாவட்டங்களிலிருந்தும் அறிந்துவந்திருக்கிறார்கள்.

"அவர்கள் தங்களின் சுற்றுப்பயணத்தின்போது அறிந்துவந்த சூழ்நிலைகளை விளக்கி இன்று காலைமுதல் மாலைவரை என்னுடன் கலந்து பேசினர்கள்.

"அவர்கள் அறிந்துவந்துள்ள சூழ்நிலைகள், நமக்கெல்லாம் மிகுந்த நம்பிக்கை ஊட்டுவனவாயும் உற்சாகமூட்டுவனவாயும் உள்ளன.

"தேர்தல் சூழ்நிலைகள் பற்றி நமக்கிருந்த நம்பிக்கை நாடறிந்த ஒன்றுகும். ஆனுலும், நமது நம்பிக்கையை மிகுவிக்கும் வகையில் மகிழ்ச்சிகரமான செய்திகளைத்தான் நமது ஆய்வுக் குழுவினர் என்னிடம் தந்திருக்கின்றனர்.

"நமது தேர்தல் குழுவினர், தரப்பட்ட தகவல்களையெல்லாம் அவற்றின் தரங்களை ஆராய்ந்து, சோதித்து அறிந்து, அவற்றில் சலித்து எடுத்துச் சிறப்பானவற்றைப் பொறுக்கித் தரும் திறனும் தன்மையும் பண்பும் கொண்டவர்களாவர்.

"தெளிவாகச் சொல்ல வேண்டுமானல், கண்ணில் எண்ணெய் ஊற்றிக்கொண்டு உற்றுக் கவனித்துத் தகவல்களைப் பரிசீலித்த பின்னர்தான், நாம் எல்லாம் களிப்படையத்தக்க செய்திகளை அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள்.

"கழகத்தில் நான் எப்போதுமே கொஞ்சம் சந்தேகமும், சற்றுக் குழப்பமான மனநிலையும் உடையவன் ; ஆனல், எனது சந்தேகத்தைப் போக்கக்கூடிய வகையிலும், நம்பிக்கையை அதிகரிக்கும் வகையிலும், குழப்பத்தை நீக்கும் வகையிலும் ஆய்வுக் குழுவினர் செய்தி கொண்டுவந்திருக்கின்றனர்.

"தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடும் என்று நாம் திருச்சி மாநாட்டில் முடிவு செய்தபிறகு, மாற்றுக் கட்சியினர் பலரும் மருட்சியடைந்ததும், உற்றாராயிருக்கவேண்டியவர்கள் மாற்றார் போல் பேசத் துவங்கியதும், மக்கள் தங்கள் நம்பிக்கை வெற்றி பெறுவது கண்டு ஆச்சரியப்பட்டதும், நம்மிலேயே சிலர்கூட வியப்படைந்ததும் நன்றாகத் தெரிந்தவைதான்.

"தி. மு. கழகம் தோன்றியதுமுதல் கடந்த ஏழாண்டுக்கு மேலாக ஆற்றிவந்துள்ள அரும்பணியும், வளர்த்து வந்துள்ள ஜனநாயக உணர்வும் மக்களுக்குத் தெரியும். அதன் விளைவாக நாம், பலரும் ஆச்சரியப்படத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம், இன்று!

"தோன்றியதுமே, கழகத்தை உருட்டு விழியால் பார்த்தே சுட்டெரித்துவிட நினைத்தவர்கள் உண்டு! ஏளனத்தால் அழித்துவிட மனப்பால் குடித்தோர் உண்டு! ஆனல் நாம், எத்தனையோ கஷ்டநஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு இன்று வளர்ந்திருக்கிறோம்.

நிகழ்ச்சிகள் விவரம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலி எழுப்பி அவரை வரவேற்றனர்.

தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு அண்ணா அவர்களை கேட்டுக்கொண்டார். தோழர் கோ. இளவரசு அதனை வழிமொழிந்தார்.

அண்ணா அவர்கள் நீண்ட கையொலிகளிடையே எழுந்து முன்னுரையாக சிறிது நேரம் பேசினர்.

அடுத்து, ஆய்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோரும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தமிழகமெங்கணும் தாங்கள் சுற்றுப் பயணம் செய்தபோது கண்டறிந்த சூழ்நிலைகளை விளக்கமாக எடுத்துரைத்தனர்.

அண்ணா அவர்கள் முடிவுரையாக அரியதோர் கருத்துரை வழங்கினர்.

தோழர் முகவை—ஆர். எஸ். பாண்டியன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. கி.)

'இந்துமத வெறியர்கள் போக்கை அனுமதிக்க முடியாது'

பண்டித பந்த் எச்சரிக்கை

"இந்த நாட்டின்மீது நம்பிக்கையில்லாதவர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிவிட வேண்டும்"

என்று, பண்டித பந்த் இங்கு கூட்டம் ஒன்றில் பேசும்போது, குறிப்பிட்டாராம்.

சில தீய சக்திகள்—குழப்பமும் கலகமும் விளைவிக்கும் சக்திகள் அவ்வப்போது தலைதூக்கி, உள்நாட்டில் குழப்பம் விளைவிக்க முற்படுவதாகவும், அவற்றை அனுமதிக்க முடியாதெனவும் அவர் எச்சரிக்கை தந்தாராம்.

'இந்து ராஜ்'

"ஒரு 'இந்து ராஜ்' அமைக்க வேண்டுமென சிலர் விரும்புகிறார்கள்; இது நமது இந்து மதத்திற்கே முரணானதாகும்" என்றும் பண்டித பந்த் குறிப்பிட்டாராம்!

சென்னை-பெரம்பூர் தி.மு.க. மாணவர்கிளை துவக்கவிழா

27-10-56 காலை 10 மணிக்கு, சென்னை பெரம்பூர் கடைத்தெரு, எண்-115 இல்லத்தில தோழர் டி. கே. பொன்னுவேலு தலைமையில், தி. மு. கழக மாணவர் கிளை (பெரம்பூர்) துவக்கவிழா நடைபெறும். மாணவர் கிளையில் அகரை, ஆர்வம் கொண்ட தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திருவொற்றியூர் தி. மு. கழக உறுப்பினர்கட்கு :

27-10-56 மாலை $6\frac{1}{2}$ மணியளவில், சென்னை—திருவொற்றியூர் தி. மு. கழகப் பணிமனையில் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

ARUNA

கே. வி. கே. சாமி
போட்டோ படங்கள்

பெரியாரும்—சாமியும் ; N. S. K.-யும்—சாமியும்
சாமி தனி—4 சைஸ்—புத்தகம் வைத்திருப்பது ;
கேப்டன்—கன்னத்தில் கை வைத்திருப்பது.
இறந்த பின்னல் எடுத்தது
2 B. சைஸ் 100-க்கு ரூ. 10; கார்டு சைஸ் ரூ. 30 ;
8/6 சைஸ் ரூ. 110. கழிவு ரூ. 25.
முன்பணத்துடன் ஆர்டர் கொடுக்கவும்
எஸ் டி செல்வம்—செல்வ மளிகை, 1, செல்விசர் தெரு, தூத்துக்குடி

யோசனையை ஏற்க மறுத்து டில்லிக்கு சென்னை கடிதம்

எல்லைக் குழு அமைக்க வற்புறுத்தல்

சென்னை, அக் 25—

பண்டித பந்த்தின் யோசனையை ஏற்க மறுத்து சென்னை சர்க்கார் டில்லிக்குக் கடிதம் எழுதியுள்ளனர் என்று தெரியவருகிறது.

சென்னை—ஆந்திர மாநிலங்களின் எல்லைத் தகராறினைத் தீர்க்கும் பொறுப்பினை மண்டலக் குழுவிடம் விடக்கூடாது என்றும், ஒரு எல்லைக் குழு அமைப்பதின் மூலமோ, அல்லது மத்திய மந்திரி ஒருவர் மூலமோ, அல்லது டில்லி நியமிக்கும் ஒருவர் மூலமோ இந்தத் தகராறுக்கு முடிவுகாண வேண்டும் என்றும் கடிதத்தில் சென்னை சர்க்கார் குறிப்பிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தக் கோரிக்கையை வற்புறுத்த டில்லிக்கு மந்திரி ஒருவர் போகவேண்டுமா என்பது குறித்தும் சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறதாம்.

இந்த விவகாரம் குறித்து முதன் மந்திரியும் நிதி மந்திரியும் கூடிப் பேசியதாகவும் தெரியவருகிறது.

காமராசர் — ம. பொ. சி. சந்திப்பு

முதன் மந்திரி காமராசரை, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. அவர்கள் சந்தித்து, எல்லைத் தகராறு குறித்துப் பேசியதாகத் தெரியவருகிறது.

சட்டசபையில், எல்லைத் தகராறு குறித்து சர்க்கார் அறிவித்துள்ள கொள்கை கண்டு தனக்கு மகிழ்ச்சி என்றும், ஆனல் வெறும் அறிவிப்போடு சர்க்கார் நின்று விடாமல், டில்லிக்கு மந்திரி ஒருவர் சென்று நிலையை விளக்கி எல்லைக் குழு நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், சர்க்கார் உருவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்வரை தமிழரசுக் கழகக் கிளர்ச்சி நில்லாது என்றும் ம. பொ. சி. காமராசரிடம் தெரிவித்ததாகப் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

சட்டசபைமுன் மறியல் : 22 பேர் கைது

சென்னை, அக். 25—

தமிழரசுக் கழகத்தவர் எல்லைக் குழு அமைக்கக் கோரி நடத்தும் கிளர்ச்சியின் ஒரு பகுதியாக நேற்று காலை சட்டசபை முன்பாக விதிக்கப்பட்டுள்ள தடையை மீறி தோழர் சின்ன அண்ணாமலை தலைமையில், 22 பேர்கள் அடங்கிய தொண்டர் குழு மறியல் நடத்தக் கிளம்பினர். அவர்கள், தடை விதிக்கப்பட்ட இடத்தை அடைந்ததுமே போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நூரியாநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.